**OS No. 61 /2019**

DW 1. - முருகன்

**நாள்** 19.08.2025

பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி சீனிவாசன் தாவா வழக்கில் 5 லக்க சொத்திற்கு பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 5 லக்க சொத்திற்கு வாதி சீனிவாசன் மற்றும் எங்களது வாரிசு இறந்துபோன பாண்டி என்பவருக்கு ஏற்கனவே பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகத்தின் அடிப்படையில் தாவா வழக்கு சொத்துக்களின் 1 முதல் 3 மற்றும் 5வது லக்க சொத்து எனது பாகத்திறகு ஒதுக்கப்பட்டது என்றும், 4வது லக்க சொத்து இறந்துபோன பாண்டிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி தாவா இலக்க சொத்து பாண்டிக்கு கிடைக்கப்பெற்று பாண்டி இவ்வழக்கில் கண்ட 29ம் பிரதிவாதி மாணிக்கம் என்பவருக்கு பவர் கொடுத்து மேற்படி 29ம் பிரதிவாதியிடமிருந்து 30ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.**

**மேற்படி 4ம் லக்க சொத்தில் 30ம் பிரதிவாதி போர்வெல் அமைத்து தற்போது வரை வாழை, தென்னை, மா, கொய்யா போன்ற மரங்கள் வளர்த்து விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**

**District Munsif,**
**Manamadurai.**